**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.ம.எண்.2/2025 அதன் அ.வ.எண்.37/2025**

ரவிந்திரன் ... மனுதாரர் /வாதி

–எதிர்–

கண்ணையா ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 14.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.மோகன்ராஜ் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, 2 ம் தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அதன் இயற்கை தன்மைகள் மற்றும் அதில் உள்ள ஆக்கிரமிப்புகளை குறித்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151 சி.பி.சி ன் பிரகாரம் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரருக்கு எதிராக 2 வது தபசில் சொத்தைப் பொறுத்து விளம்புகை, சுவாதீனப் பரிகாரம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 ம் தபசில் சொத்தானது, 1 வது தபசில் சொத்தின் ஒரு பகுதி என்றும், 1 வது தபசில் சொத்தானது தனக்கு செட்டில்மெண்ட் ஆவணத்தின்

மூலம் பாத்தியப்பட்டது என்றும், 1ம் தபசில் சொத்திற்கு மேற்கு பக்கம் எதிர்மனுதாரர் சொத்து வைத்துள்ளார் என்றும், எதிர்மனுதாரருக்கு 2ம் தபசில் சொத்தில் எந்தவிதமான உரிமை மூலமும் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் 2ம் தபசில் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் கட்டி வருகிறார் என்றும், எனவே, 2ம் தபசில் சொத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு, ஆக்கிரமிப்பு பகுதிகளை குறிப்பிட்டு வரைபடம் தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) எதிருரை சுருக்கம்**

3.1) மனுதாரர் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடமானது தவறானது என்றும், பூமியில் மனுதாரருக்கு நிலம் இல்லை என்றும், எதிர்மனுதாரரால் உண்மையான வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர் கட்டுமானங்கள் அவர் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் தான் உள்ளது என்றும், மனுதாரர் எந்தவித வழக்கு மூலமும் இல்லாமல் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

5) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் / வாதி கோரியவாறு நீதிமன்ற ஆணையர் / வழக்கறிஞரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

6) இரு தரப்பும் கேட்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி ஆவார். இந்த வழக்கானது மனுதாரர் தரப்பில், விளம்புகை, சுவாதீனம் மற்றும் செயல் உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) எதிர்மனுதாரர் 2ம் தபசில் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானங்கள் கட்டி வருகிறார் என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி சங்கதி மறுக்கப்பட்டுள்ளது.

8) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுதாரர் தரப்பில் தபசில் 2வது அயிட்டச் சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே 2வது தபசில் சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதா, இல்லையா என்பதை கண்டறிய வேண்டுமென்றால் தபசில் சொத்தை நில அளவையர் உதவியுடன் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தால் தான் இவ்வழக்கினை சரியாக தீர்வு காண முடியும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், 2ம் தபசில் சொத்தின் இயற்கை அமைப்பு மற்றும் ஆக்கிரமிப்புகளை கண்டறிய இந்நீதிமன்றத்திற்கு நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தால் அது இவ்வழக்கினை தீர்மானிக்க இருதரப்பிற்கும் உதவியாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் / நீதிமன்ற ஆணையர் திரு. பேச்சிமுத்து , M.S.No. 6271/2022 நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் மனு 2ம் தபசில் சொத்தை சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு ஆக்கிரமிப்புகள் மற்றும் இயற்கை அமைப்புகள் குறித்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். நீதிமன்ற ஆணையருக்கு ஊதியமாக ரூ.8,000/- நிர்ணயம் செய்யப்படுகிறது. மேற்படி ஊதியத்தை மனுதாரர் தரப்பில் நேரடியாக 02.01.2026ம் தேதியோ அல்லது அதற்கு முன்போ நீதிமன்ற ஆணையரிடம் வழங்க வேண்டும். வழக்கறிஞர் ஆணையர் இரு தரப்பிற்கும் உரிய அறிவிப்பு கொடுத்து பின் 2ம் தபசில் சொத்தையும் அதன்

அமைப்புகளையும் பார்வையிட்டு அளந்து வரைபடத்துடன் 20.01.2026ம் தேதியோ அல்லது அதற்கு முன்போ அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
orders uploaded on 19.12.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.12.19 17:39:14 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
orders uploaded on 19.12.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.12.19 17:39:22 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.2/2025 அதன்</u>**

**<u>அ.வ.எண்.37/2025</u>**

வரைவு – உத்தரவு

**<u>19.12.2025.</u>**